திருவெஃகா ஸ்தல புராணம்

ச்ரியபதியான ஸர்வேச்வரன் சேதநோஜ்ஜீவனத்தின் பொருட்டு அர்ச்சா ரூபியாய் எழுந்தருளின திவ்யதேசங்களில் ஆழ்வார்களின் மங்களாசாஸனம் பெற்றவை நூற்றெட்டு ஆகும். அவற்றுள் கோயில், திருமலை, பெருமாள்கோயில் என்பவை ப்ரதானமானவை. அவைகளில் காஞ்சீ மாநகரத்திலேயே பதினெட்டு திவ்ய தேசங்கள் உள்ளன. அவற்றுள் திருவெஃகா ஒன்று. திருவெஃகா என்ற திவ்யதேசம் காஞ்சீபுரம் பஸ் ஸ்டாண்டிலிருந்து ஸ்ரீ வரதராஜப்பெருமாள் சந்நிதிக்குப்போகும் வழியில், மத்தியில் அஷ்டபுஜம் என்ற மற்றொரு திவ்யதேசத்துக்கு எதிர்ப்புறமாக இருக்கிறது.

முன்பு, நான்முகக் கடவுள் எம்பெருமானைக் காணவேண்டித் தவம் செய்கையில் ஓர் அசரீரி வாக்கு தோன்றியது. அதாவது "தொண்டை நாட்டிலுள்ள ஸத்ய வ்ரதக்ஷேத்திரத்திற்குச் சென்று ஓர் அச்வமேத வேள்வியியற்றி, ஆயிரம் அச்வமேதயாக பலனைப்பெற்றுத் திருமாலைக் கண்கூடாகக் காணப்பெறுவாய்" என்று. நான்முகனும் அந்த அசரீரி வாக்கின்படி ஸத்யவ்ரத க்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்து திருஅனந்த ஸரஸ்ஸையும் அதனருகில் திகழும் திருவத்திமாமலையிருக்கும் இடத்தில், எதையும் அற்புதமாக நிருமித்து முடிக்கவல்லவனான விச்வகர்மாவையழைத்து ஸ்ரீஹஸ்திகிரியை உத்தரவேதியாக்கி அவ்விடத்திலேயே யாகசாலையும் மணிமாடங்கள் சூழ்ந்தழகாயதொரு நகரத்தையும் தோற்றுவிக்க ஆணையிட்டார்.

பின்பு யாகம் ஆரம்பிப்பதற்கு நான்முகனின் தர்ம பத்னியாகிய ஸரஸ்வதி இல்லாமல் வேள்வி நடைபெறாது என்று ப்ருஹஸ்பதி தெரிவிக்க, பின்பு பிரமன் வஸிஷ்டரை, ஸரஸ்வதி நதீ தீரத்தில் தவம் செய்து கொண்டிருக்கும் ஸரஸ்வதியை அழைத்து வர அனுப்பினார். முன்பொருகால், ஸரஸ்வதி பக்தர்களும் லக்ஷ்மீ பக்தர்களும் நான்முகக் கடவுளிடத்தில் யார் சிறந்தவர்கள் என்று வினவ, நான்முகனார் தாமாகவே பிராட்டியின் பெருமையை ஸித்தாந்தமாக அறுதியிட்டுக் கூறினார். இதை ஒப்புக்கொண்டு ஸரஸ்வதி, தன்னை நதிகளுக்குள்ளாவது சிறப்புடையவளாம்படி அருள் புரிய வேண்டுமாறு ப்ரார்த்தித்தாள். இதற்கும், ஒப்புயர்வற்று விளங்கும் கங்கையே சிறந்தவளென்று தீர்ப்புக் கொடுத்ததன் பேரில் மிகவும் சினங்கொண்டவளாய் தன் அம்சமான ஸரஸ்வதி நதியை அடைந்து வாழ்ந்து கொண்டிருந்தாள். இந்நிலையிலுள்ள ஸரஸ்வதியை வஸிஷ்ட முனிவர் வந்து ப்ரார்த்தித்துக்கொண்டபொழுது மேற்கூறியவற்றைச் சொல்லி, தான் வருவது இயலாது; வேண்டுமானால் தன் கணவர் தானிருக்கும இடத்திற்கு எழுந்தருளி வேள்வி நடத்தலாமென்று கூறி, வேள்விக்கு வருவதை மறுத்துவிட்டாள்.

வஸிஷ்டமுனிவர் எவ்வளவு சொல்லியும் வேள்விக்கு வராததால் ஸகல மஹரிஷிகளும் ஸாவித்திரி முதலிய மற்றைய மனைவியரை வைத்துக்கொண்டு வேள்வி தொடங்கி முடிப்பது நலம் என்று கூற, யாகம் ஆரம்பிக்கப்பட்டது. யாகத்தில் தேவர்களுக்கு முதல் மரியாதை நடந்ததனால் அசுரர்கள் சீற்றங்கொண்டு இந்த வேள்வியைக் கலைக்க எண்ணி, அசுரர்களில் ஒருவனான விரோசனன் ஆலோசனையின் பேரில் ஸரஸ்வதியிடம் சென்று "மேன்மை தங்கிய கலைமகளே,

acharya.org

தீய மதிகொண்ட சில முனிவர்களால் தூண்டப்பட்ட உமது கணவர் முக்கிய மஹிஷியான உம்மைத் தவிர்த்து மற்ற மஹிஷிகளோடுகூடி யாகம் செய்யத் தொடங்கியிருக்கின்றனர். மிகவும் அநீதியான இந்தச் செய்தியை நாங்கள் பொறுக்கவில்லை. எவ்வகையினாலாவது அந்த வேள்வி நடைபெறாத வண்ணம் தடைசெய்தீராகில், உம்மிடத்தில் அன்பு பூண்டொழுகும் எமக்கு மகிழ்ச்சி உண்டாகும்" என்று கூறினர்.

அதுகேட்டு ஸரஸ்வதி நான்முகனார் செய்யும் வேள்வியைத் தடுப்பதற்கு ஸஹ்யமலையினின்று கிளம்பி வேகவதியென்னும் நதியாகப் பெருகி ஸத்யவ்ரத க்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்தாள். அந்த நதியின் பெருக்கு வேகத்தைப் பார்த்து யாகசாலையிலுள்ளோரனைவரும் வியாகுலப்பட்டு நான்முகனைத் தஞ்சமாக அடைந்தார்கள். பிரமன் யோகத்ருஷ்டியால், இது அசுரர்கள் தூண்டப்பெற்ற ஸரஸ்வதியின் காரியமென்றுணர்ந்து ஸ்ரீமந் நாராயணனைக் குறித்துத் தோத்திரஞ் செய்தார். தோத்திரத்தினால் மிகவும் திருவுள்ளமுவந்த எம்பெருமான், ஏற்கனவே உபநிஷத்துக்கள் தன்னைச் சேதுவாக(அணையாக) ஓதியிருப்பது பொருள் பெற்றதாம்படி "சதுமுகனார் வேள்விதனைச் சதிர்கோடுக்கச் செறிந்தோடுங் கதியுடைய வேகவதிக்கணையாக வந்துதித்தோய்" என்றும் "அணியாக வேகவதி அலையோடு கொண்டோடி ஆலிக்க அணையாகக் கிடந்த கனைதானோ" என்று பின்னானார் ஏத்துமாறு அந்த ஸரஸ்வதியின் வெள்ளத்தைத் தடைசெய்யவல்ல அணையாகச் சயனித்துக் கொண்டருளினன். அந்த திருப்பள்ளித் திருக் கோலத்தைக் கண்ட ஸரஸ்வதி நாணமுற்று மேலே பெருகிச் செல்ல முடியாமல் அந்தர்வாஹினியாய்ச் சென்று கடல் சேரலுற்றாள்.

யதோக்தகாரியென்று சொல்லப்படுகின்ற அப்பெருமானது தென்புறமாகச் செல்லுற்ற வேகவதியை, வஸிஷ்டர் முதலிய முனிவர்கள் பிரமனது சொற்படி வந்து வணங்கி தாயே! ஸரஸ்வதியே! யாகசாலையில் இனியாகிலும் வந்து சேர்ந்து நாதரோடு கூடிக்களித்திருந்து இப்பெருவேள்வியை நிறைவேற்றியருளவேணும். எல்லா நதிகளிற்காட்டிலும் உன்தனுக்கே மிக்க சிறப்பு உள்ளதாக நான்முகக் கடவுள் அனுக்ரஹம் செய்கின்றார்," என்று சொல்லி வேண்டிக்கொள்ள, அவளும் மனமகிழ்ச்சியுடனே நதியில் நின்றும் விரைந்தெழுந்து வந்து நான்முகக் கடவுளோடு சேரலுற்றாள்.

இந்த யாகம் முடியும் சமயத்தில் பரமபவித்ரமான புண்யகோடி விமானம் அக்னி மத்தியில் நின்றும் தோன்றியது. அந்தப் புண்யகோடி விமானத்திலுள்ளே "உலகேத்து மாழியானத்தியூரான்" என்றும், "வரந்தரும் மாமணிவண்ணன்" என்றும் ஆழ்வார்களால் போற்றப்பட்ட, பேரருளாளப் பெருமானென்னும் ஸ்ரீ வரதராஜன், காட்சி தந்தருள அவ்விடத்திலுள்ளோர் அனைவரும் கண்டு ஆனந்தமென்னும் அமுதக்கடலில் ஆழ மூழ்கினர்.

சதுமுகனார் வேள்வியைக் காக்க வந்து வேகவதியாற்றின் பிரவாகத்தில் குறுக்கே அணையாக வலதுகை கீழ்பட சயனித்துக் கொண்டு கண் வளர்ந்தருளிய படியால் இப்பெருமான் 'புஜங்கசயனன்', திருவணைப்பள்ளி கொண்ட பெருமான்

acharya.org

திருமழிசை ஆழ்வார்

யதோக்தகாரிஸன்னதி

என்ற திருநாமத்தோடு திகழ்ந்தார். இப் பெருமானார் திருமழிசை ஆழ்வாரின் பெருமையை உலகறியச் செய்வதற்கு புரிந்த கீழ்கண்ட லீலை மிகவும் அற்புதம்.

ஒரு சமயம் பக்திசாரர் என்னும் திருமழிசையாழ்வார், தமக்கு ஆசார்யரான பேயாழ்வாரின் அவதார ஸ்தலமாகிய மயிலாப்பூர் என்று இப்பொழுது வழங்கும் இடத்தில் சிலகாலம் யோகத்தில் இருந்து தமது சொந்த இடமான மஹீஸாரபுரமென்னும் திருமழிசைக்குத் திரும்பி வந்து வழக்கம்போல் அனுஷ்டானத்திற்குப் பிறகு திருமண் சாத்திக்கொள்வதற்கு, வைத்த இடத்தில் திருமண் காணப்படாமையால் மனம் வருந்தலானார். அன்றிரவு அவர் கனவில் திருவேங்கடமுடையான் தோன்றி அருளிச் செய்த படியே காஞ்சீபுரத்தில்

acharya.org

திருவெஃகாவை அடுத்துள்ள பொற்றாமரைக் குளத்தில் திருமண் கண்டு எடுத்துச் சாத்திக்கொண்டு அதன் கரையில் எழுந்தருளியிருக்கும் புஜங்க சயனப் பெருமானை ஸேவித்து வந்தார். பக்திஸாரரின் வைபவத்தை அறிந்து கணிகண்ணன் என்ற பக்தனும் திருவெஃகாவை அடைந்து பக்திஸாரரை ஆசார்யராகக் கொண்டு புஜங்க சயனப பெருமானை ஸேவித்து வந்தான். அந்த ஊர் பல்லவராயனென்னும் அரசன், தன் மனைவி திருமழிசை ஆழ்வாரின் கடாக்ஷத்தால் முதுமை நீங்கி யௌவனம் பெற்றாள் என்று அறிந்து தானும் இளமைப் பருவம் அடைவதற்கு விரும்பினான். திருமழிசையாழ்வாரது சிஷ்யனான கணிகண்ணனை அந்த அரசன் ஆழ்வாரைத் தம்மிடத்திற்கு அழைத்துவரும்படி கேட்டுக் கொண்டான். தம்முடைய ஆசார்யர் எங்கும் வருவதில்லை என்று கணிகண்ணன் பதிலளித்து விட்டான். கணிகண்ணன் ஒரு வரகவி என்றறிந்து அரசன் தன்னைப்பற்றி ஒரு கவி பாடச் சொன்னான். அனந்த சயனப் பெருமானையன்றி அன்னியரைத் தான் பாடுவதில்லை என்று அக் கணிக்கண்ணன் சொல்லிவிடவே அரசன் மிகவும் சினங்கொண்டு கணிகண்ணனைக் காஞ்சீபுரத்தை விட்டு வெளியேறும்படிக் கட்டளையிட்டான்.

கணிகண்ணனும் தம் ஆசார்யரான திருமழிசையாழ்வார் முன்பு சென்று, நடந்தவைகளை விண்ணப்பம் பண்ணி, ஆழ்வாரும், பாகவத அபசாரம் நடக்குமிடத்தில பகவானும் இருக்கக் கூடாதென்று பெருமானிடத்தில்,

> "கணிகண்ணன் போகின்றான் காமருபூங்கச்சி
> மணிவண்ணா நீ கிடக்க வேண்டா — துணிவுடைய
> செந்நாப் புலவனும் போகின்றேன் நீயு முன் தன்
> பைந்நாகப் பாய் சுருட்டிக்கொள்."

என்று விண்ணப்பஞ் செய்ய எம்பெருமானும் பக்தர்க்கிணங்கி அவர் பின்னே எழுந்தருளினார். எம்பெருமானுடைய ஸங்கல்பப்படி காஞ்சீ மாநகரம் கார் இருளால் சூழப்படவே அரசனும் தன் பிழையை உணர்ந்து, ஆழ்வார் இருக்குமிடத்தை அடைந்து சரணடைந்து, தன் தவறுகளைப் பொறுத்து மீண்டும் நகருக்குள் எழுந்தருளும்படி ப்ரார்த்தித்தான். ஆழ்வாரும் மனமுவந்து எம்பெருமானிடத்தில்

> "கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி
> மணிவண்ணா நீ கிடக்கவேண்டும் — துணிவுடைய
> செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன் நீயுமுன்தன்
> பைந்நாகப் பாய் விரித்துக்கொள்."

என்று ப்ரார்த்திக்கவே எம்பெருமானும் பக்தர்க்கிணங்கி திருவெஃகாவை வந்து அடைந்து சேஷ சாயியாய் ஆழ்வார் திறத்து அபிமானத்தால், தான் இங்ஙனஞ் செய்தது பின்புள்ளார்க்கும் ப்ரத்யக்ஷமாக வேணுமென்று இடத் திருக்கையைக் கீழாக வைத்துக் கண்வளர்ந்தருளினார். பெருமானும் ஆழ்வாரும் காஞ்சிக்கு வெளியே ஓரிரவு தங்கிய இடம் 'ஓர் இரவு இருக்கை' (ஓரிக்கை) என்று சொல்லப்படுகிறது. எம்பெருமான் பக்தன் ப்ரார்த்தித்தபடி செய்ததனால் இவருக்கு தமிழ்மொழியில் 'சொன்னவண்ணம் செய்த பெருமாள்' என்றும் வடமொழியில் 'யதோக்தகாரி' என்றும் திருநாமம் வழங்கப் பெறுகிறது.

acharya.org